THE MADRAS LEGISLATIVE COUNCIL

Tuesday, the 10th February 1959.

The House met in the Council Chamber, Fort St. George, at two of the clock, Mr. Chairman (THE HON. DR. P. V. CHERIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Relief for patriots who suffered during the freedom struggle

* 16 *Q.*—SRI V. V. RAMASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the measures taken by the Government to provide relief for patriots who suffered during the freedom struggle in the country; and

(*b*) whether there is any proposal before the Government to award scholarships to the children and grand-children of political sufferers?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon the Chief Minister) : (*a*) A statement[a] showing the measures undertaken by Government to assist political sufferers is placed on the table of the House.

(*b*) No, Sir. It is, however, understood that the Government of India have under consideration a scheme for the grant of scholarships to children of political sufferers. Details of the proposals are not, however, available with this Government.

SRI V. V. RAMASWAMI : நிலம் இனாமாக வழங்கப்பட்ட அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் ஏதாவது வழங்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : 1,200 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்பட்டு வருகிறது—நிலம் கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி, இல்லாமல்போனாலும் சரி.

SRI MOHAMED RAZA KHAN : May I know whether the lands allotted to the political sufferers are being used for cultivation and whether they are carrying on agriculture on those lands or they are remaining as before?

THE HON. SRI R. VENKATARAMAN : The scheme was cancelled long ago. It will require some research to know what is happening to those lands.

---

[a] **Printed as Appendix I on pages 212–213 infra.**

[10th February 1959

Sri A. SUBRAMANYAM : இந்த 1,200 ரூபாய் என்றிருப்பதை 3,000 ரூபாய்க்கு உயர்த்தி, 3,000 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ள அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்குச் சலுகை கொடுப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : காலேஜில் படிக்கும் மாணவர்களுக்கும் 1,200 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் இருப்பவர்களின் குழந்தைகளுக்கும் சலுகை கிடைக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லுவது இதைவிட இன்னும் எந்த விதத்தில் உபயோகமாக இருக்கும் என்பது தெரியவில்லை.

Sri A. SUBRAMANYAM : உயர் நிலைப் பள்ளி வகுப்புகளில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்குக் கூட இம்மாதிரியான சலுகையை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இப்பொழுது உத்தேசம் இல்லை.

Sri V. V. RAMASWAMI : அரசியல் தியாகிகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு, பட்டியல் ஏதாவது தயாரிக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது ஒவ்வொரு ஆண்டிலும் வருகிற மனுக்களை வைத்துக் கூடுதல் எண்ணிக்கை சேர்க்கப்படுகிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அரசியல் தியாகிகளாக இருந்தால், அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படும். இதற்குப் பட்டியல் தயாரிக்கவேண்டிய அவசியமில்லை. அரசியல் தியாகியா, இல்லையா என்பதைத்தான் சர்க்கார் கவனிக்கும்.

Sri V. K. PALANISWAMY GOUNDER : கிருஷ்ணகிரியில் அரசியல் தியாகிகளுக்கு இப்பொழுது பூமி கொடுப்பதாக உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Sri M. ETHIRAJALU : அரசியல் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களை விற்கலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஆம். இப்பொழுது விற்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் 10 வருஷங்களுக்குள்ளாக விற்கக் கூடாது என்று உத்தரவு இருந்தது.

Sri MOHAMED RAZA KHAN : May I take it that political sufferers will enjoy all the benefits, whether they continue in the Party in power or join any other Party?

The Hon. Sri R. VENKATARAMAN : Perfectly right, Sir.

Nursery schools

* 17 *Q.*—Sri T. PURUSHOTHAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of recognized Nursery Schools (Pre-Elementary Schools) in the State, district-wise;

(*b*) the conditions for the recognition of such schools run by private agencies.